# அரசியல்துறை
# தமிழீழ விடுதலைப் புலிகள்

**03.09.2023**
**தமிழீழம்.**

**அன்பார்ந்த தமிழ் மக்களே !**

**<u>போலி அறிக்கைகளை நம்ப வேண்டாம்.</u>**

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறையினராகிய எமது கடிதத் தலைப்பை ஒத்ததாக போலியாகத் தயாரிக்கப்பட்டு 'தேசியத் தலைவன் எனும் தானைத் தலைவன்' என்ற தலைப்பில் 18.08.2023 என திகதியிடப்பட்டு சமூக வலைத் தளங்களில் பரப்பப்பட்டுக் கொண்டிருக்கும் போலி அறிக்கை தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறையினரின் உத்தியோக பூர்வ அறிக்கை இல்லை. அது தேசவிரோதிகளால் போலியாகத் தயாரிக்கப்பட்டு சமூக வலைத்தளங்களில் திட்டமிட்டு பரப்பப் பட்டுவருகின்றது.

அன்பான தமிழ் மக்களே! இவ்வாறான உண்மைக்குப் புறம்பான அறிக்கையை நம்ப வேண்டாம். அத்துடன் நீங்கள் விழிப்புடன் செயற்பட வேண்டும் என கேட்டுக் கொள்கின்றோம்.

எமது விடுதலைப்போராட்ட வரலாறுகளை சிதைக்கும் நோக்கில் தேசவிரோத செயல்களில் ஈடுபடுபவர்கள் தமது உண்மைக்குப் புறம்பான தகவல்களை அறிக்கைகளாக மக்கள் மத்தியில் பரப்பி மக்களை குழப்புகின்ற புலனாய்வுச் செயற்பாடாகவே இவற்றை நாம் உற்று நோக்குகிறோம். இச் செயற்பாடுகளில் ஈடுபடும் தேசவிரோதிகளை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம். வரலாறு இவர்களுக்கான தண்டனையை வழங்கியே தீரும். உண்மைக்குப் புறம்பான இவ் அறிக்கையில் குறிப்பிடப்படும் விடயத்திற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறையினராகிய எமக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்பதை சுட்டிக்காட்டுகின்றோம்.

எமது உத்தியோக பூர்வ அறிக்கைகள் Politicalwingofltte.org என்ற இணைய தளத்தில் பார்வையிட்டு உறுதிப்படுத்தலாம். மேலும் தொடர்ந்து வரும் காலங்களில் எமது ஊடகப் பிரிவால் காணொளி வடிவிலும் உத்தியோக பூர்வ அறிக்கைகள் வெளியிடப்படும் என்பதை அறியத்தருகின்றோம்.

**"புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்"**

வி.ஜெயாத்தன்

வி. ஜெயாத்தன்
03/09/23

........................

பொறுப்பாளர்
அரசியல்துறை
தமிழீழ விடுதலைப் புலிகள்.

**தொடர்புகளுக்கு :- தொ.எண் : 00447414466757. மின்னஞ்சல் :** politicaltamileelam@gmail.com